## கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 27.05.2026 ந் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சிக்கு உட்பட்ட பொதுசுகாதாரபிரிவில் கரட்டூர் MCC மையத்தில் தினசரி 4 MT கொள்ளளவு கொண்ட 40 HP மோட்டார் இயந்திரத்தின் பிளேடுகள், பேரிங், புல்லி, Conveyer Belt மாற்றி வெல்டிங் பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1537 நாள். 5.03.2026 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், இயந்திரத்தினை முற்றிலுமாக மாற்றி பொருத்தி தரும் பணிக்கு 13.03.2026 ம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | Sri.Krishna Agencies,<br>3, Bazaar Street,<br>Sathyamangalam – 638 401 | ரூ. 1, 93, 820./-<br>+<br>(GST உட்பட) |
| 2. | S & G Solutions<br>No. 1/B, Indira Nagar.<br>Ondiputhur,<br>Coimbatore – 641 016 | ரூ. 2, 18, 600/-<br>+<br>(GST உட்பட |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள Sri Krishna Agencies, 3 Bazaar Street, Sathyamangalam – 638 401 அவர்களின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பணி 13.03.2026 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1555**

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். DMA/366/2026-SBM.2 நாள்.02.05.2026 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர். அவர்களின் காணொளி கூட்ட அறிவுரை நாள். 05.05.2026 ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் SBM.2.0 Third party assessments Ranking ஆய்வு நடைபெற உள்ளதன் அடிப்படையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், இந்நகராட்சியின் மூலம் பராமரிக்கப்படுகின்ற 21 பொதுசுகாதார கழிப்பிடங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை பொதுமக்கள் விழிப்புணர்வுடன் பயன்படுத்தப்பட்டு செயல்முறையில் உள்ளதை கண்டறிந்து அதற்கு Swachh Survekshan 2026 திட்டங்களை பொதுமக்களுக்கு எளிதில் தெரிவித்துக்கொள்ள ஏதுவாக விளம்பரபடுத்திடவும். மேலும் கழிப்பிட பராமரிப்புக்கு தேவையான QR-Code (புகார்கண்காணிப்பு) பொருத்தவும், ஆண், பெண் கழிப்பிட போர்டு வைக்கவும்.கழிப்பிடத்திற்கு தேவையான சோப், சோப்டப்பா, நாப்கின்.Tissue Paper, கண்ணாடி, டாய்லெட்பிரஸ், மூடிய பக்கெட், விளம்பர பிளக்ஸ் போர்டுகள். ஆகியவை பொருத்தி பராமரித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு நிதி (IEC)ன் கீழ் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.25,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1556**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2025 – 2026 ஆம் நிதியாண்டிற்கான பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்து தணிக்கைக்கு முன்னிலைப்படுத்த தனியார் கணக்கு ஆலோசகர் (Accounts Consultant) மூலம் மேற்கொள்ள விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண். 2273/2020/பி1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1557**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் வாரச்சந்தையில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்தினை திரு.வெங்கடாச்சலம் என்பவர் 01.09.2023 முதல் 31.08.2026 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறார். மேற்படி குத்தகை உரிமத்திற்கான காலம் 31.08.2026 உடன் முடிவடைவதால் மேற்படி குத்தகையினத்திற்கு முன்கூட்டியே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1558**

5. இந்நகராட்சிக்கு சொந்தமான (மோர் மாக்கெட்) காமராஜ் வணிக கடை எண்.13 ஐ திரு.ஜி.வி.செந்தில்குமார் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். தற்போது கடையினை தொடர்ந்து நடத்த முடியவில்லை எனக் கூறி 31.03.2026 வரை கடைக்கு செலுத்தவேண்டிய வாடகைத் தொகையினை நிலுவையின்றி செலுத்தி கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக 01.04.2026 இல் கடிதம் கொடுத்துள்ளார்.

அதன்படி மேற்படி கடையினை நேரில் ஆய்வு செய்யப்பட்டு 01.04.2026 முதல் நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனவே 01.04.2026 முதல் வரிவிதிப்பு எண் 057/99 கொண்ட கடைக்குரிய வாடகை கேட்பினை நீக்கம் செய்யவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1559**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான (மோர் மாக்கெட்) காமராஜ் வணிக கடை எண்.12 ஐ திரு.ஜி.வீ.மாரிசாமி என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். தற்போது கடையினை தொடர்ந்து நடத்த முடியவில்லை எனக் கூறி 31.03.2026 வரை கடைக்கு செலுத்தவேண்டிய வாடகைத் தொகையினை நிலுவையின்றி செலுத்தி கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக 01.04.2026 இல் கடிதம் கொடுத்துள்ளார்.

அதன்படி மேற்படி கடையினை நேரில் ஆய்வு செய்யப்பட்டு 01.04.2026 முதல் நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனவே 01.04.2026 முதல் வரிவிதிப்பு எண் 057/520 கொண்ட கடைக்குரிய வாடகை கேட்பினை நீக்கம் செய்யவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3060/2016/அ3)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1560**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய கேருந்து நிலையத்தில் உள்ள KNMT கடை எண்கள் 1,2,3 மற்றும் 4 ஆகிய கடைகளை திரு. ராஜா ஸ்ரீ அன்பு பவன் , ராஜா கேட்டர்ஸ்" என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார் . தற்போது கடையினை தொடர்ந்து நடத்த முடியவில்லை எனக் கூறி 09.04.2026 இல் நகராட்சிக்கு கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி கடைகளுக்குண்டான குத்தகை காலம் 30.06.2026 உடன் முன்றாண்டுகள் முடிவடைய உள்ளதால், மேற்படி கடைகளுக்கு 01.04.2026 முதல் 30.06.2026 வரையிலான நிலுவை வாடகைத்தொகையினை அவரது வைப்புத் தொகையிலிருந்து சரிகட்டிக் கொள்ளவும், இக்கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3060/2016/அ3)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1561**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான IUDP மோர் மார்க்கெட் கடை எண் 10 க்கு 07.11.2025 ஆம் தேதியன்று நடைபெற்ற பொது மற்றும் மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திரு.K.வேலுச்சாமி என்பவர் ரூ.8,600/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியதன்படி இந்நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டு அதற்குரிய ஒரு வருட வாடகை வைப்புத்தொகை மற்றும் உறுதிமொழி பத்திரங்கள் வழங்க 23.01.2026 இல் அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தும் இதுநாள் வரையில் வைப்புத்தொகை செலுத்தாமலும், கடையினை பயன்படுத்தாமலும், இருந்து வருவதால் மேற்படி 11.05.2026 முதல் கடை நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு மேற்கண்ட கடைக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1567/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1562**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவுகளை ராமர் எக்ஸ்டன்சன் MCC மையங்களில் 2026-2027 ம் ஆண்டுகளில் ஏற்படும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண். 1548 நாள். 13.03.2026 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், எடை போடும் எலக்ட்ரானிக் இயந்திரம் (300 Kg) 2 எண்ணங்கள் புதியதாக விநியோகம் செய்யும் பணிக்கு 12.05.2026 ம் தேதியன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | One Stone Weigting, Equipments, 7/458B/3 Ram Nagar, Cutchery Street, Gobichettipalayam - 638 452 | ரூ. 20, 500./- + (GST உட்பட) |
| 2. | Royal Scales, 10A Thenam palayam, Coimbatore District, Coimbatore - 641 653 | ரூ. 21, 500/- + (GST உட்பட |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள One Stone Weigting, Equipments, 7/458B/3 Ram Nagar, Cutchery Street, Gobichettipalayam - 638 452 அவர்களின் விலை விகிதம் ஒன்றை விட மற்றொன்று குறைவாக உள்ளதால் அதனை ஏற்று

அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பணி 14.05.2026 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1563**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லக்கூடிய இடங்களான பேருந்து நிலையத்தில் குப்பைகளை குப்பை தொட்டியில் போட ஏதுவாக இரட்டை குப்பை தொட்டி (Blue Green) 5 இடங்களில் அமைத்து பேருந்து நிலையத்தை தூய்மையாக பராமரிக்கும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 1528 நாள். 05.03.2026 இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில், 60 லிட்டர் கொள்ளளவு கொண்ட SS இரட்டை குப்பைத் தொட்டி 5 எண்ணங்களை கொள்முதல் செய்யும் பணிக்கு 15.05.2026 ம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | Sri.Krishna Agencies,<br>3, Bazaar Street,<br>Sathyamangalam – 638 401 | ரூ. 89, 680./–<br>+<br>(GST உட்பட) |
| 2. | S & G Solutions<br>No. 1/B, Indira Nagar.<br>Ondiputhur, Coimbatore – 641 016 | ரூ. 95, 000/–<br>+<br>(GST உட்பட |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள Sri Krishna Agencies, 3 Bazaar Street, Sathyamangalam – 638 401 அவர்களின் விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி பணி 18.05.2026 அன்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1564**

11. இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பணிபுரியும் 12 நபர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF ESI) தொகை ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2025 வரை கால தாமதமாக செலுத்தியமைக்கு அபராத இழப்பீட்டு தொகை ரூ.1,50,977/– (Penal Damages) மற்றும் வட்டித் தொகை ரூ.90294/– (Interest) என மொத்தம் 2,41,271/– மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையாளர்–II,தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், ஈரோடு அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1565**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகத்தில் கீழ்காணும் 10 மேல்நிலைத் தொட்டிகள் உள்ளன.

| வ. எண் | மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள இடங்கள் | கொள்ளளவு லட்சம் லிட்டர் |
|---|---|---|
| 1 | பார்க் | 20.00 |
| 2 | சக்தி ரோடு –1 | 5.11 |
| 3 | சக்தி ரோடு –2 | 3.00 |
| 4 | செங்கோட்டையன் காலணி | 3.00 |
| 5 | வீட்டுவசதி வாரியம் | 7.00 |
| 6 | ஜோதி நகர் | 1.50 |
| 7 | பார்வதி நகர் | 2.00 |
| 8 | சாய்பாபா நகர் | 2.00 |
| 9 | ஜெய்துர்க்கை நகர் | 2.00 |
| 10 | பூரணி நகர் | 2.00 |

மேற்படி, மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் அளவு கண்காணித்து குடிநீர் விநியோகம் செய்ய அளவுமானி Digital Water Level Indicator பொருத்தப்பட்டள்ளது.

மேற்படி, அளவு மானிக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு ஆகும் உத்தேச வருடாந்திர பராமரிப்பு செலவு தொகை ரூ.1,00,000/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதனை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் தொகை ரூ. 1,00,000/–னை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1566**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30–வார்டுகளில் 10 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்ற குடிநீர் உந்து குழாய் 17.99 கி.மீட்டர் நீளத்திற்கும் நகரில் 142 கி.மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிநீர் விநியோக பணிகளை வெளிமுகமை முறை (Out Sourcing) முறை மூலம் செய்திட நகர்மன்ற தீர்மானம் எண் 1458 நாள் 21.01.2026 மூலம் அனுமதி பெற்று 12.03.2026–ல் பணி உத்திரவு Mayura Environtech Private Limited, Tirupattur அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தகாலம் 30.06.2026–ம் தேதி உடன் முடிவடைகிறது. தற்சமயம் நிரிந்தரமாக தலைமை நீரேற்று நிலையத்தில் பணியில் உள்ள 1 நபர் பணி முப்பு காரணமாக இம்மாதம் (31.05.2026) ஓய்வு பெறுகிறார். எனவே குடிநீர் பணி அத்தியாவசியமாக உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்திலும், குடிநீர் வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில்

வேலை செய்ய ஆட்கள் குறைவாக உள்ளதால் Out Sourcing முறையில் 01.07.2026 முதல் 30.09.2026 வரை

| | | |
|---|---|---|
| 1. | எலக்ட்ரீசியன் | 5 |
| 2. | ஓட்டுநர் | 1 |
| 3. | குழாய் திறப்புனர்கள் | 21 |
| | மொத்தம் | 27 |

மொத்தம் 27 நபர்களை அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.20,00,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதனை பொதுநிதி அல்லது குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1567**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பேருந்து நிலையத்தில் வெப்ப அலையின் தாக்கத்தை குறைப்பதற்காக, தண்ணீர் பந்தல் இரண்டு மாதங்களுக்கு அமைக்கவும், சாமியானா பந்தல் மற்றும் டேபிள் அமைக்கவும் வாடகை தொகை ரூ.15000/- ஆகும். இத்தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் தொகை ரூ,15000/-னை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1568**

15. இந்நகராட்சியின் பொதுசுகாதாரபிரிவில் 2026 – 2027 ம் நிதியாண்டில் விளம்பர கட்டணங்களுக்கு ஆகும் செலவினங்களுக்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.1489 நாள். 05.03.2026 ல் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் Swachh Survekshan 2025 ன் கீழ் திடக்கழிவு மற்றும் கழிப்பிட பயன்பாடு குறித்து குப்பையில்லா நகராட்சி (Garbage Free City) 3 Star மற்றும் ODF ++ ஆகிய இரண்டு தரச்சான்றுகளையும் பெறுவதற்கு பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்களை பெறுவதற்காக மலர் பப்ளிகேசன் லிமிடெட் நாளிதழில் 13.05.2026 ம் தேதியன்றும் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ. 3,780/- மற்றும் தினத்தந்தி தினசரி நாளிதழில், 14.05.2026 ஆம் தேதி அறிவிப்பு விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ. 7,711/- செலவினம் மேற்கொள்ளப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1569**

16. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 33552/2022/EA2 – SWM – 14 நாள். 10.01.2023 ம் தேதியில் இந்நகராட்சியில் உள்ள நிரந்தர தூய்மை பணியாளர்கள் 88 நபர்களை கொண்டு நகராட்சியின் 3 MCC, 2 RRC, அனைத்து பூங்காக்கள், பேருந்து நிலையம், மார்க்கெட், சாக்கடை சுத்தம் செய்தல், புல் வெட்டுதல், கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், புகை மருந்து தெளித்தல், தெருக்கள் சுத்தம் செய்தல் போன்ற அத்தியாவசிய பணிகளை அனைத்து வார்டுகளிலும் மேற்கோள்ள அறிவுறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த 30.06.2025 வரை 31 நிரந்தர தூய்மை பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றும், இறந்தும் உள்ளார்கள். மேலும் வருகின்ற 30.06.2026 அன்று 11 நிரந்தர தூய்மை பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளார்கள். இந்நிலையில் மொத்தமுள்ள 42 பணியாளர்கள் காலியிடத்திற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 33552/2022/இ1 நாள். 30.04.2025ல் உள்ள கடிதத்தில் 15 தூய்மை பணியாளர்கள் மட்டுமே MCC, RRC பணிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்ற நிலையில் மீதமுள்ள பற்றாகுறை பணியாளர்கள் 27 எண்ணிக்கை இல்லாததால் மேற்கண்ட முக்கிய பணிகளுக்கு பற்றாக்குறை உள்ளது. எனவே மேற்காணும் அத்தியாவசிய பணிகளை தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பணிகளை முழுமையாக செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி 25 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நிர்வாக அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் (Un Skilled) குறைந்தபட்ச தினக்கூலியான 2025-2026 ஆம் ஆண்டிற்கான நாள் ஒன்றுக்கு தினக்கூலி 646/-வீதம் ஓராண்டு காலத்திற்கு எடுத்து பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் பின்வரும் விபரப்படி கணக்கிடப்பட்டுள்ளது.

| | | Per day Salary | No. of Days | No. of Workers | Grand Total |
|---|---|---|---|---|---|
| Rs.646 x 365 Days x 25 Workers | = | 646/- | 365 | 25 | 58,94,750/- |
| EPF 13% | = | | | | 7,66,317/- |
| ESI 3.25% | = | | | | 1,91,579/- |
| Admin Cost 5% | = | | | | 2,94,737/- |
| Group Personal Accident Insurance Policy Rs.1250 x 25 No's | = | | | | 31,250/- |
| Safety equipment like reflective jacket, gloves, mask, helmet etc Rs.2000 x25 No's | = | | | | 50,000/- |
| | | | | | 72,28,633/- |
| | | | | Rounded Off | 72.30 இலட்சம் |

மேற்காணும் விபரப்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் நிர்வாக அனுமதி பெற்ற பின்பு ஏற்படும் காலியிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவ்வப்போது கூடுதலாக மேற்காண் விபரப்படியான தினக்கூலி விகிதத்தில் பணியாளர்களை வெளிக்கொணர்வு பணி முறை மூலம் பணியாளர்களை எடுத்து கொள்ளவும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் மூலம் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விகிதத்தின்படி தினக்கூலி நிர்ணயம் செய்து வழங்கிடவும் அதற்காகும் ஓராண்டு காலத்திற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மொத்தம் ரூ.72.30/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதி பெற்றுமேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1570**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பொதுசுகாதாரபிரிவில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு 2026-2027 ஆம் ஆண்டுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை கீழ்காணும் விபரப்படி அரசு அனுமதி பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச

செலவினம் ரூ. 90,000/– க்கு பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **தேவைப்படும் உபகரணங்கள்** | **ஒன்றின் விலை** | **எண்ணிக்கை** | **மொத்த தொகை** |
|---|---|---|---|---|
| 1 | கையுறை (Hand Cloves) | 165.20 | 100 | 16520 |
| 2 | சிந்தடிக் காட்டன் (Hand Cloves) | 141.60 | 200 | 28320 |
| 3 | ஒளிரும் சட்டை | 262.60 | 110 | 28886 |
| 4 | மாஸ்க் (Surgical Mask) | 4.10 | 3000 | 12300 |
| | | | மொத்தம் | 86026 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1571**

18. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். DMA/1199/2026/SBM.1/Par நாள். 19.05.2026 அறிவுரையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 நடைமுறைபடுத்துவதற்கு குப்பைகளை 4 வகைகளாக பிரித்து நகராட்சி பணியாளர்களிடம் பொதுமக்கள் மக்கும் குப்பை, (பச்சை நிற தொட்டி) மக்காத குப்பை (நீலம் நிற தொட்டி) சுகாதார கழிவுகள் (சிவப்பு நிற தொட்டி) சிறப்பு கழிவு (கருப்பு நிற தொட்டி) என பொதுமக்கள் பிரித்து வழங்க IEC விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், அனைத்து பொதுமக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் வார்டு வாரியாக துண்டு பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள் ஒட்டவும், அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் போட்டிகள் நடத்திடவும்,முக்கிய இடங்களில் ஆடியோ விளம்பரம், LED, பிளக்ஸ் போர்டுகள் வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– ற்கு பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1572**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 சுப்பிரமணியன் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் வார்டு எண்.30 சுப்பு நகரில் சிறுபாலம் பழுது ஏற்பட்டு கழிவுநீர் தடையின்றி செல்லாமல் தேங்கி நிற்பதால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மேற்படி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ஆகியவைகளை சரி செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 3.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1573**

20. சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஆம் ஆண்டில் நடைபெற்றதில், 106 – கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத்தொகுதியில் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 51 வாக்குச்சாவடிகளில் வாக்குச்சாவடி எண் எழுதும் பணி உட்பட வாக்குச்சாவடிக்குண்டான அனைத்து அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், கழிப்பறை வசதி மற்றும் சாய்வுதள வசதிகள், ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும் தேர்தல் நாளன்று வாக்காளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாமியானா பந்தல், மாதிரி வாக்குச்சாவடி அமைத்தல், வாக்குச்சாவடிக்கு தேவையான தடையின்றி மின்சார வசதி, கூடுதல் மேஜை மற்றும் நாற்காலிகள் (Tables & Chairs), Fedestal Fan, Wheel Chair, Aircooler மற்றும் பிற வசதிகள் செய்யப்பட்டது. இப்பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்தினை பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி பொது நிதியின் கீழ் TNULB Act 1995 Sec 57(7)ன் கீழ் ஒப்பந்ததாரர் 2N Infra அவர்களால் ரூ.4.00 இலட்சத்திக்கும் மற்றும் Explosive Enterprises அவர்களால் ரூ.2.00 இலட்சத்திற்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றத்தின் பார்வையிட்டு அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்காண்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1574**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் தூய்மை குறித்த மதிப்பீடு செய்வதற்கு (Swachh Survekshan – 2026) க்கு களநிலவரங்களை தனியார் Agency மூலம் கண்டறிந்து அதற்கு மதிப்பெண் வழங்கும் பணி மத்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வார்டு எண்.1 ஸ்ரீ ராமபுரம், வார்டு எண்.2 ராமர் எக்ஸ்டென்சன், வார்டு எண். 4 விவேகானந்தர் வீதி, மற்றும் வார்டு எண்.8 LIG காலணி ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சி கழிப்பிடங்களை ஆய்வு செய்யப்பட்டத்தில் கழிப்பிடத்தில் உள்ள பழுதடைந்த குழாய்கள், தண்ணீர் வசதி, கதவுகள், மின்விளக்குகள், மராமத்து செப்டிக்டேங், வாஷ்பேசன் இவைகள் அனைத்தும் சரி செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணியிணை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 4.90 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1575**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் தூய்மை குறித்த மதிப்பீடு செய்வதற்கு (Swachh Survekshan – 2026) க்கு களநிலவரங்களை தனியார் Agency மூலம் கண்டறிந்து அதற்கு மதிப்பெண் வழங்கும் பணி மத்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே வார்டு எண். 22 சாமிநாதபுரம் (ஜின்னிங் பேக்டரி வீதி) மற்றும் வார்டு எண்.23 சிலேட்டர் ஹவுஸ் வீதி, சாமிநாதபுரம், சாமிநாதபுரம் –2 ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சி கழிப்பிடங்களை ஆய்வு செய்யப்பட்டத்தில் கழிப்பிடத்தில் உள்ள பழுதடைந்த குழாய்கள், தண்ணீர் வசதி, கதவுகள், மின்விளக்குகள், மராமத்து செப்டிக்டேங், வாஷ்பேசன் இவைகள் அனைத்தும் சரி செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். பணியின்

அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணியிணை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 4.90 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1576**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் தூய்மை குறித்த மதிப்பீடு செய்வதற்கு (Swachh Survekshan – 2026) க்கு களநிலவரங்களை தனியார் Agency மூலம் கண்டறிந்து அதற்கு மதிப்பெண் வழங்கும் பணி மத்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே வார்டு எண். 15 வள்ளியாத்தாள் கோயில் மேடு, வார்டு எண்.17 கமலா ரைஸ்மில் வீதி, பஜனை கோயில் வீதி, மற்றும் வார்டு எண்.18 நேரு வீதி, வ.உ.சி. வீதி, ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சி கழிப்பிடங்களை ஆய்வு செய்யப்பட்டத்தில் கழிப்பிடத்தில் உள்ள பழுதடைந்த குழாய்கள், தண்ணீர் வசதி, கதவுகள், மின்விளக்குகள், மராமத்து செப்டிக்டேங், வாஷ்பேசன் இவைகள் அனைத்தும் சரி செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.20 இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணியிணை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ.5.20 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1577**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் தூய்மை குறித்த மதிப்பீடு செய்வதற்கு (Swachh Survekshan – 2026) க்கு களநிலவரங்களை தனியார் Agency மூலம் கண்டறிந்து அதற்கு மதிப்பெண் வழங்கும் பணி மத்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே வார்டு எண். 20 நாய்க்கன் காடு, வார்டு எண்.26 சிவசண்முகம் வீதி , சிவசண்முகம் வீதி –2, மற்றும் வார்டு எண்.27 சீதாலட்சுமிபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சி கழிப்பிடங்களை ஆய்வு செய்யப்பட்டத்தில் கழிப்பிடத்தில் உள்ள பழுதடைந்த குழாய்கள், தண்ணீர் வசதி, கதவுகள், மின்விளக்குகள், மராமத்து செப்டிக்டேங், வாஷ்பேசன் இவைகள் அனைத்தும் சரி செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணியிணை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 4.90 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1578**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சிகளின் தூய்மை குறித்த மதிப்பீடு செய்வதற்கு (Swachh Survekshan – 2026) க்கு களநிலவரங்களை தனியார் Agency மூலம் கண்டறிந்து அதற்கு மதிப்பெண் வழங்கும் பணி மத்திய அரசின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே வார்டு எண்.28 கங்குவார் வீதி, வார்டு எண்.29 சங்கரன் கோயில் வீதி, மற்றும் வார்டு எண்.30 அண்ணா நகர், செங்கோட்டையன் காலணி ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சி கழிப்பிடங்களை ஆய்வு செய்யப்பட்டத்தில் கழிப்பிடத்தில் உள்ள பழுதடைந்த குழாய்கள், தண்ணீர் வசதி, கதவுகள், மின்விளக்குகள், மராமத்து செப்டிக்டேங், வாஷ்பேசன் இவைகள் அனைத்தும் சரி செய்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.90 இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 4.90 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1579**

26. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026, 106 – கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத்தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் கோபிசெட்டிபாளையம் அவர்களின் நடவடிக்கை ந.க.எண்.444/2026/அ1 நாள்.14.03.2026 இன் படி அலுவலக பணியாளர்களுக்கு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்து நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தேர்தல் வாக்காளர் வாக்குப்பதிவு (SVEEP & DOCUMENTATION) பணி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சி பகுதிகளில் தேர்தல் வாக்குப்பதிவு விழிப்புணர்வு மற்றும் ஆவணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தேர்தல் பணிகளுக்காக இந்நகராட்சியின் மூலம் கீழ்கண்ட விபரப்படியான செலவினங்கள் தேர்தல் அவசர அவசியம் கருதி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | செலவு விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தேர்தல் நடத்தை விதிகள் அமலில் வந்தவுடன் நகராட்சி பகுதிகளில் அனைத்து கட்சி கொடிகம்பங்கள் அகற்றுதல், அரசு மற்றும் பொது இடங்களில் உள்ள கட்சி தலைவர்களின் சிலைகள், கட்சி தலைவர்கள் உருவப்படங்கள் மற்றும் சின்னங்கள் மறைக்கப்பட்டது, நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்கள் மற்றும் சுற்றுச் சுவர்களில் உள்ள அனைத்து வகையான விளம்பரப் பலகைகள், விளம்பரப் பதாகைகள் மற்றும் கட்சிக் கொடிகள், கட்சித் தலைவர்களின் படங்கள் மற்றும் Cutouts/ Hoardings அகற்றப்பட்டது. | 32562 |
| 2 | இந்நகராட்சி பகுதியில் தேர்தல் விழிப்புணர்வு (SVEEP Activities) நகராட்சி நாய் பிடிக்கும் வாகனம் TN 36 AA 8939 வண்டியில் ஒலிப்பெருக்கி பொருத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | 5700 |
| 3 | உள்ளூர் கிராமிய கலைக்குழுவான செம்பருத்தி கலைக்குழு மூலம் SVEEP Activities நகராட்சி பொதுமக்களுக்கு தேர்தல் வாக்குப்பதிவு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. (பேருந்து நிலையம், கோபி கலை அறிவியல் கல்லூரி, மொடச்சூர் வாரச்சந்தை மற்றும் சென்ற தேர்தலில் குறைவான வாக்குப்பதிவு பதிவு செய்யப்பட்ட பகுதிகள்) | 30000 |

| | | |
|---|---|---|
| 4 | இந்நகராட்சி பகுதியில் SVEEP Activities நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பொதுமக்களுக்கு சமூக வலைதளங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு Video Creation (YouTuber) செய்தது. (பேருந்து நிலையம், கோபி கலை அறிவியல் கல்லூரி, மொடச்சூர் வாரச்சந்தை மற்றும் சென்ற தேர்தலில் குறைவான வாக்குப்பதிவு பதிவு செய்யப்பட்ட பகுதிகள்) | 15000 |
| 5 | இந்நகராட்சி பேருந்து நிலையம் SVEEP செயல்பாடுகள் 21.03.2026 அன்று தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. (சாமியான பந்தல் 20 x 20 , கார்பெட் 20 x 20, சைடு வால், டேபிள், நாற்காலி, டேபிள் விரிப்பு, ஒலி, ஒளி அமைத்தல், குடிநீர் ஏற்பாடு, பேரணி விழிப்புணர்வு பதாகைகள், வண்ணக்கலர், மலர் அலங்காரம் மற்றும் கோலங்கள், இந்நகராட்சி பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் பேரணி மேற்கொள்ளப்பட்டு கலந்து கொண்ட நபர்களுக்கு தேனீர் ஏற்பாடுகள் மேற்கொண்டது மற்றும் புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு மேற்கொள்ளப்பட்டது) | 39900 |
| 6 | இந்நகராட்சியில் பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு பேனர்கள், தேர்தல் அரசன் பதாகைகள், Selfie Point மற்றும் இதர விழிப்புணர்வு பேனர்கள் | 114550 |
| 7 | இந்நகராட்சி பகுதியில் சென்ற தேர்தலில் குறைவான வாக்குப் பதிவாகியுள்ள வாக்குச்சாவடி எண் 86, 87, 88, 90, 91, 92, 95, 96 மற்றும் 98 ஆகிய பாகங்களில் உள்ள மக்களுக்கு தேர்தல் வாக்குப்பதிவு விழிப்புணர்வை ஏற்படுத்த 24.03.2026 முதல் 22.04.2026 வரை நகராட்சி பணியாளர்கள் DBC பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு மூலம் அந்தந்த பகுதிகளில் காலை மற்றும் மாலை நேரங்களில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம், ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு உணவு மற்றும் சிற்றுண்டி, தேர்தல் விழிப்புணர்வு பதாகைகள், மாக்கோலம், பூங்கோலம், மற்றும் கலாச்சார கலை நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. | 129700 |
| 8 | 106 – கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி தேர்தலில் 100% வாக்குப்பதிவினை வலியுறுத்தி முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு திட்டம் கோபி மாராத்தான் தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் மற்றும் இயக்குநர் சங்கத்துடன் ஒருங்கிணைந்து நகராட்சி ஆணையாளர் செயல்பட மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களால் 09.04.2026 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி இந்நகராட்சியின் மூலம் கோபி மாராத்தான் 2026 விழா ஏற்பாட்டாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு 18.04.2026 அன்று காலை சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்க தெரிவிக்கப்பட்டதன்படி இந்நகராட்சி பணியின் அவசர அவசியம் கருதி 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் தேநீர் ராஜா ஸ்ரீ அன்புபவன் உணவகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. | 27500 |
| 9 | 2026 சட்டமன்ற தேர்தல், ஈரோடு மாவட்டம், 106 கோபிசெட்டிபாளையம் தொகுதி பகுதிகளில் விநியோகிக்கப்படும் செய்தித்தாள்களின் வழியாக ஈரோடு மாவட்டம் தேர்தல் தொடர்பாக தினந்தோறும் வரும் செய்திகளை முறையே பதிவு செய்து ஆவணப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி காலைக்கதிர், தினத்தந்தி, தினமலர், தினகரன், தமிழ் இந்து, தினமணி, English Hindu. DC மற்றும் Times of India நாளிதழ்களில் பெறப்பட்டது. | 2964 |

| | | |
|---|---|---|
| 10 | 106 கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி, கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பாகம் எண்.87 ஐ மாதிரி வாக்குச்சாவடியாக அமைக்க உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி தேர்தல் நாளன்று (23.04.2026) மாதிரி வாக்குச்சாவடி அமைக்க தேர்தல் வாக்குப்பதிவு விழிப்புணர்வு முறைகளை பதிவு செய்து பேனர் தட்டிகள் வைக்கப்பட்டது. | 12650 |
| | மொத்தம் ரூ. | 410526 |

ந.க.எண்.263/2026/எப்1

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் அவசர அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. தீர்மான எண்.1580**

27. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு கடித எண்.2807/மா731/2026-4 நாள்:18.05.2026-ன் படி அம்மா உணவகத்திற்கு தேவைப்படும் உட்கட்டமைப்புகளை சீரமைத்தல், சமையல் உபகரணப்பொருட்களை கொள்முதல் செய்தல் போன்ற பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார். எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தை ஆய்வு செய்ததில் தரைஓடு, வர்ணம் பூசுதல், பழுதான கதவுகளை சீரமைத்தல், Exhaust Fan, Fire Extinguisher, Light, Fan, CCTV Camera, குழாய்கள் மற்றும் சமையல் உபகரணங்கள், Fridge, Steamer, Trolly, Mixie போன்றவற்றை கொள்முதல் செய்தல் மற்றும் மராமத்துப்பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை செய்ய உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி, இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்காண் செலவின தொகை ரூ.7.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1581**

28. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையங்களில் சேமித்து வைத்து அக்கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப ஏற்கனவே நகர் மன்ற தீர்மானம் எண்.1414 நாள் 21.01.2026 ல் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் லாரிகளை வாடகைக்கு விநியோகம் செய்யும் Greenways road line ஒப்பந்ததாரர் மூலம் தொடர்ந்து இப்பணியினை 13.05.2026 முதல் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதார பிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் படி வசூலிக்கப்படும் அபராத கட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge) செலவு செய்து கொள்ளவும், அத்தொகையில் இருப்பு இல்லாத நேர்வில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1582**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்தும், மழைநீர் தேக்கம் அடைந்து உள்ளதையும், மற்றும் புதிய மழைநீர் வடிகால் அமைக்க வேண்டும் என்று பல்வகை கோரிக்கை உள்ளது. எனவே, இந்நகராட்சியில் வார்டு எண் 1–முதல் 30–வரை உள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்களின் Topograpical கணக்கெடுப்பு செய்து புவியியல் தகவல் அமைப்பு (GIS), வரைப்படம், Drown Photos , நீர்நிலையின் வரைபடம், Superimposing, Othomosaic, DEM, DSM in GIS Format , Contour Level ஆகிய அனைத்து பணிகளையும் மேற்கொண்டால் மட்டுமே மழைநீர் வடிகாலினை வாட்டத்திற்கு ஏற்ப அமைக்க முடியும். மேலும், மழைநீர் வடிகால் திட்ட பிரரேணை நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அலுவலகத்தில் Contour Level மற்றும் Disposal Point வரைபடத்துடன் சமர்ப்பிக்க கோரி உள்ளார்கள். இப்பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் தொகை ரூ. 7.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1583**

30. இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில், உள்ள அனைத்து வீடுகளிலும், வணிகநிறுவனங்களிலும், நகராட்சி பணியாளர்கள் தினந்தோறும் குப்பைகளை சேகரித்து முறையாக அப்புறப்படுத்துகிறார்கள். ஆனால் ஒரு சில நபர்கள் முறையாக நகராட்சி பணியாளர்களிடம் குப்பையை வழங்காமல் பொது இடங்களில் கொட்டி விடுகிறார்கள். எனவே குப்பையை கொட்டும் நபர்களை கண்டறிந்து அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், மேலும் அப்பகுதிகளில் குப்பையில்லாமல் உருவாக்கி நகரத்தின் தூய்மையை மேம்படுத்திட புதியதாக அறிமுகபடுத்தபட்ட AI Model கேமரா பொருத்தி அதன் மூலம் குப்பை கொட்டும் நபர்களை கண்டறிந்து அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க முன் மாதிரியாக ஒரு இடத்தில் AI Model கேமரா பொருத்தி கண்காணிக்க தோராயமாக ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.00/– இலடச்சத்திற்கு பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

AI Model Camera பொருத்த உத்தேச செலவின விபரப்பட்டியல்

| SL NO | ITEM | QTY | PRICE PER DAY | GST 18% | PRICE |
|---|---|---|---|---|---|
| 1 | CCTV Camera 4 MP 4MM Lens (UNV IP Cam with Night vision | 1 | 4800.00 | 864.00 | 5664.00 |
| 2 | 4 channel NVR 4K support single SATA HDD 64 MBPS(UNV) | 1 | 4650.00 | 837.00 | 5487.00 |
| 3 | 4+2 Channel poE (CP Plus) | 1 | 2400.00 | 432.00 | 2832.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 1 TB HDD (WD) | 1 | 5290.00 | 952.19 | 6242.19 |
| 5 | 5 Slot Power Spike box | 1 | 380.00 | 68.39 | 448.39 |
| 6 | Handware Installation testing & Commissioning | | 2300 | | 2300 |
| 7 | Sim card Router | 1 | 2300.00 | 414.00 | 2714.00 |
| 8 | Sim Card with Recharge Plan (JIO 5G | 1 | | | 500 |
| 9 | Power Backup | 1 | 6450.00 | 1161.00 | 7611.00 |
| 10 | Edge Device (Axon board) | 1 | 15500.00 | 2790.00 | 18290.00 |
| 11 | Edge Device power adapter and cable (Portronics) | 1 | 1034.19 | 186.15 | 1220.34 |
| 12 | Edge Device micro HDMI cable | 1 | 219.49 | 39.51 | 259.00 |
| 13 | Edge Device Case (Axon 3D-Printed Case) | 1 | 532.18 | 116.82 | 649.00 |
| 14 | Edge Device Heat sink (Axon Active Heat Sink) | 1 | 287.00 | 63.00 | 350.00 |
| 15 | RJ 45 Cable (running per meter) | 1 | 36 | | 36 |
| 16 | RJ 45 Connector | 10 | 5 | | 50.00 |
| 17 | Hand Ware Installation (CAT-6 Copper Cable Dlink+1"inch PVC Pipe Supply + Wall blocks Pvc bends + junction box with Screwes + 1/per mtr Laying) | 30(approx) | 95rs per meter | | 2850 |
| 18 | Software development cost (AI model till deployment, includes computing cost) | 1200X30hrs | | | 36000 |
| 19 | Rack | 1 | 6000 | | 6000 |
| | | | Total | | **99502.92** |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1584**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி. 5(2) துறை அரசாணை (நிலை) எண் : 462 நாள்: 08.12.2025 மற்றும் (ந.நி. 5(2) துறை அரசாணை (நிலை எண்: 468 நாள் : 10.12.2025இன் படி கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்திற்கு மொழிப்போர் தியாகி அமரர் கோபி கி.பி.வெங்கிடு நினைவு தினசரி வணிகவளாகம் என பெயர் சூட்ட ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கோபியிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையின் மேற்குபகுதியில் மாநில நெடுஞ்சாலை துறையினால் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நுழைவு வாயிலின் இரண்டு வளைவிற்கு பெருந்தலைவர் காமராஜர் வளைவு என பெயர் சூட்ட ஆணையிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு பணிகள் செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.90 ஆயிரம் செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 1430 நாள் :21.01.2026 அனுமதி பெறப்பட்டது. தற்போது மேற்படி, பணிகள் மேற்கொள்ள சாரம் அமைத்தல் மற்றும் சிமெண்ட் மூலம் எழுதும் பணி மேற்கொள்ள உள்ளதால் ரூ.1.40 இலட்சம் கூடுதல் செலவினம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி, பணிக்கு ரூ.2.30 இலட்சம் உத்தேச செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1585**

32. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் TNUDF கடை எண்கள் 1 மற்றும் 2 ற்கு 12.02.2026 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதில் திரு.K.M.சிலம்பரசன் த/பெ முருகன் என்பவர் மேற்படி கடைகளுக்கு அதிகபட்ச ஒப்பந்த புள்ளி வழங்கியதன் பேரில் அன்னாருக்கு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 1483 நாள் 05.03.2026 ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நீண்ட நாட்களாக உபயோக படுத்தப்படாமல் இருந்து வந்ததால் இக்கடைகளை சுற்றி குப்பைகள் மற்றும் மண்கழிவுகள் கொட்டப்பட்டு சுகாதாரமற்ற நிலையிலும், கட்டிடத்தின் ஒரு பகுதியில் கட்டிட மேல் பகுதியிலிருந்த அரச மரத்தின் வேர்கள் கட்டிட சுவர்களில் வேர்கள் பரவியுள்ளதால் இக்கடையின் குத்தகைதாரரே தங்களது சொந்த செலவில் சுத்தம் செய்தும், மேலும் மேற்படி கடையின் கிழக்குப்பகுதியில் உள்ள சுவர் மரத்தின் வேர்களினால் சேதமடைந்துள்ளதால் அச்சுவற்றினை அகற்றி அணுகு வழியாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மராமத்து பணிகள் செய்து கொள்வதாக கடிதம் சமர்பித்துள்ளார்.

எனவே மேற்படி கடையினை மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மேற்படி நகராட்சி கடை நீண்ட காலமாக பயன்படத்தப்படாத நிலையில் இருந்து வந்துள்ளதால், மராமத்து பணிகள் மேற்கொண்டு கிழக்கு பகுதியில் அணுகு வழியாக பயன்படுத்திக்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1586**

(ஒப்பம்) என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி